பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 03 2025　　　6 45
வியாழக்கிழமை　　　காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- மொரீஷியஸில் இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி நேற்று இரவு புதுதில்லி வந்தடைந்தார்.
- ஆறு-ஜி தொழில்நுட்ப வசதி 2030-ஆம் ஆண்டிற்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய தொலைத் தொடர்புத்துறை இணை அமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
- தேசிய கல்விக் கொள்கை அனைவருக்கும் உகந்ததாக இல்லை என்பதாலேயே தமிழக அரசு அதனை எதிர்ப்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் மின் பிரச்சினை காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் ஒன்பதாயிரத்து 492 சிறு குறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.
- ஆல் இங்லாண்ட் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரெங்கி ரெட்டி - ஷிராக் ஷெட்டி இணையும், த்ரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மொரீஷியஸில் இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி நேற்று இரவு புதுதில்லி வந்தடைந்தார்.

பிரதமரின் இந்த பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் அலுவலகம் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

இந்த பயணத்தின்போது இந்தியா – மொரீஷியஸ் இடையே கடல்சார் பாதுகாப்பு, உள்ளூர் கரன்சிகளில் வர்த்தகத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மொரீஷியஸ் பிரதமர் திரு நவின்சந்திர ராம்கூலத்துடன் பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுக்களை பிரதமர் நடத்தினார்.

நேற்று நடைபெற்ற மொரீஷியஸ் நாட்டின் தேசிய தின கொண்டாட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளிலும் திரு நரேந்திரமோடி கலந்து கொண்டார்.

**[]<<<>>>[]**

வெளிநாட்டு செயற்கைக்கோள்களை செலுத்தியதன் மூலம் 143 மில்லியன் அமெரிக்க டாலரும், 272 மில்லியன் யூரோவும் அந்நிய செலாவணி கிடைத்துள்ளதாக மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மூலம் கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை 393 வெளிநாட்டு செயற்கைக் கோள்கள் செலுத்தப்பட்டதாகக் கூறினார்.

அத்துடன் வளர்ச்சியடைந்த நாடுகள் உட்பட 34 நாடுகளின் செயற்கைக் கோள்களையும் இந்தியா செலுத்தியதாக திரு ஜிதேந்திரசிங் தெரிவத்தார்.

**[]<<<>>>[]**

ஆறு-ஜி தொழில்நுட்ப வசதி 2030-ஆம் ஆண்டிற்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய தொலைத் தொடர்புத்துறை இணை அமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், ஆறு-ஜி தொழில்நுட்பப் பணிகள் சர்வதேச அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

தனியார் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவிடும் வகையில் நாடு முழுவதும் 802 மையங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், குடும்ப பிரச்சினைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கும் மருத்துவ மற்றும் சட்ட ஆலோசனை, தற்காலிக தங்கும் வசதி, காவல் துறையினர் உதவி, மன உளவியல் ஆலோசனை ஆகியவை வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இதுபோன்ற மையங்களை குறைந்தது ஒரு மாவட்டத்திலாவது அமைக்க வேண்டுமென்று மாநில அரசுகளை கேட்டுக் கொள்வதாக அவர் கூறினார்.

இத்தகைய மையங்களை அமைப்பதற்கு மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு நூறு சதவீத நிதி உதவி வழங்குவதாகவும் திருமதி சாவித்ரி தாக்கூர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் நடவடிக்கைகளும் வரும் திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஹோலிப் பண்டிகையையொட்டி அவை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்படுவதாக அவைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

தேசிய கல்விக் கொள்கை அனைவருக்கும் உகந்ததாக இல்லை என்பதாலேயே தமிழக அரசு அதனை எதிர்ப்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் திமுக சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்ளுக்கு பொதுத் தேர்வு, ஒன்பது முதல் 12-ஆம் வகுப்பு வரை பருவத் தேர்வு முறைகள் ஆகியவை தேசிய கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மாநிலங்களுக்கு உரிய வரி பகிர்வை மத்திய அரசு முறையாக வழங்கவில்லை என்றும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் மின் பிரச்சினை காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில் ஒன்பதாயிரத்து 492 சிறு குறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் நடைபெற்ற கட்சி பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், அரசின் அனைத்துத் துறைகளிலும் ஊழல் நடைபெற்று வருவதாகக் கூறினார்.

தமிழகத்தில் கல்வியின் தரம் குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்று தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைத்தால் மாவட்டத்தில் இரண்டு நவோதயா பள்ளிகள் தொடங்கப்படும் என்றும் திரு அண்ணாமலை கூறினார்.

[]<<<>>>[]

தமிழக சட்டப்பேரவையில் நாளை தாக்கல் செய்யப்படும் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் உரையை சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 100 இடங்களில் நேரடி ஒளிபரப்பு செய்ய மாநகராட்சி ஏற்பாடு செய்துள்ளது.

பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் சென்ட்ரல் ரயில் நிலையம், கோயம்பேடு பேருந்து நிலையம், மெரினா கடற்கரை, பெசன்ட்நகர் கடற்கரை உள்ளிட்ட 100 இடங்களில் எல் இ டி திரை மூலம் காலை மணி 9-30 முதல் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்று மாநகராட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதேபோல் நாளை மறுநாள் தாக்கல் செய்யப்பட உள்ள வேளாண் நிதி நிலை அறிக்கையும் எல் இ டி திரையில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

நீர்வளத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளை மாநில அரசின் இதர துறைகளுடன் ஒன்றிணைந்து செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மாநில நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு மங்கத் ராம் சர்மா வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நீர்வளம் தொடர்பான கருத்தரங்கில் பேசிய அவர், நீர் ஆதாரங்களை உரிய முறையில் பயன்படுத்தி அதனை பாதுகாக்க வேண்டுமென்று கூறினார்.

இந்த கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்களின் புதுமை முயற்சிகள் குறித்த அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நீலகிரி, ஈரோடு, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இன்று முதல் இரண்டு நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குட்டாரஸ் மூன்று நாள் பயணமாக இன்று பங்ளாதேஷ் செல்கிறார்.

**[]<<<>>>[]**

சௌதி அரேபியாவின் ஜீத்தாவில் நடைபெற்ற அமெரிக்க பிரதிநிதிகளுடனான பேச்சுக்களுக்குப் பிறகு 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

பாகிஸ்தானின் பலூச் விடுதலை கிளர்ச்சியாளர்களால் சிறை பிடிக்கப்பட்டிருந்த ரயில் பயணிகள் அனைவரும் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

உலக தர வரிசையில் உள்ள முதன்மையான 50 கல்வி நிறுவனங்களில் ஒன்பது இந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.

[]<<<>>>[]

கூட்டுப் பயிற்சிக்காக கடலோரக் காவல்படையின் ரோந்து கப்பலான சாஷம் மூன்று நாள் பயணமாக செசல்ஸில் உள்ள விக்டோரியாக துறைமுகம் சென்றடைந்தது.

[]<<<>>>[]

ஜார்க்கண்டில் வெப்ப அலை அல்லது புயலால் பாதிக்கப்படுவோருக்கு நிதி உதவி வழங்கப்படும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தைச் சேர்ந்த பைக் பந்தய வீரர் ரெகான் கான் ரஷீதுக்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை மூலம் ஐந்து லட்சம் ரூபாய்க்கான காசோலையை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டத்தில் நத்தம் புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் 11 ஆயிரம் பேருக்கு தனி பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து மீண்டும் துணிப்பையை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏற்படுத்தப்பட்டது.,

[]<<<>>>[]

மதுரை அருள்மிகு கூடலழகர் பெருமாள் கோவில் தெப்பத்திருவிழா நேற்ற வெகு விமரிசையாக நடைபெற்றது.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டத்தில் பிரசித்திபெற்ற அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோவிலில் 100 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று தெப்பத்திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

[]<<<>>>[]

ஆல் இங்லாண்ட் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரெங்கி ரெட்டி - ஷிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 21-17,

21-15 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் **Lundgaard – vestergaard** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் த்ரிஷா ஜோலி – காயத்ரி கோபிச்சந்த் இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை 21-17, 21-13 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

[]<<<>>>[]

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள எலிமினேட்டர் சுற்றில் மும்பை அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணி இறுதி ஆட்டத்தில் தில்லி அணியை எதிர்கொள்ளும்.

[]<<<>>>[]

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு பிரசாந்த் - போலந்தின் சைமன் வாக்கோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-2, 6-2 என்ற செற்ற கணக்கில் நார்வேயின் விக்டர் - லூகாஸ் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஹைதராபாத் - கேரளா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ஒன்று — ஒன்று என்ற கோல் கணக்கில் ட்டிராவில் முடிவடைந்தது.

**[]<<<>>>[]**